DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் திங்கள்கிழமை 12 ம் நாள் சாட்சியாகிய அண்ணாமலை என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அண்ணாமலை | வயது | 73 |
| த/பெ. | சின்னராஜி | இனம் | ஆண் |
| கிராமம் | கிழவனம் | தொழில் | விவசாயம் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**
(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).
<u>**முதல் விசாரணை 12.05.2025 அ.சா.5**</u>

1. நான் கிழவனத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 வினாயகம் எனது உறவினர். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>**குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–**</u>

2. 27.05.2023 ம் தேதி காலை 8 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.230/2023 வழக்கில் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், சரவணன் என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, கைப்பற்றுதல் மகஜர் மூலம் மண்வெட்டி, கத்தியை கைப்பற்றினார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டதாக தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.